இரத்தினக்கல் மற்றும் ஆபரண ஆராய்ச்சி மற்றும் பயிற்றுவிப்பு நிறுவனம்
(கைத்தொழில் மற்றும் தொழில்முனைவு அபிவிருத்தி அமைச்சு)

பதவி வெற்றிடங்கள்

பின்வரும் பதவிகளுக்காகத் தகுதியும் அனுபவமும் உள்ள விண்ணப்பதாரர்களிடமிருந்து இரத்தினக்கல் மற்றும் ஆபரண ஆராய்ச்சி மற்றும் பயிற்றுவிப்பு நிறுவனத்தால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. பணிப்பாளர் (ஆராய்ச்சி) - (HM 1-1) - 01 பதவி

தகைமைகள்:

வெளிவாரி விண்ணப்பதாரர்கள்:

(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் (UCG) அங்கீகரிக்கப்பட்ட இரத்தினக்கல்லியல் / புவியியல் / பௌதிகவியல் / இரசாயனவியல் அல்லது அது தொடர்பான வேறு துறையில் இளமாணிப் (Bachelor's) பட்டம் பெற்றிருத்தல் (விசேடப் பட்டங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்).

அத்துடன்

(ஆ) இரத்தினக்கல்லியல் / புவியியல் / பௌதிகவியல் / இரசாயனவியல் அல்லது தொடர்பான துறையில் பட்டப் பின்படிப்புப் பட்டம் (Masters) பெற்றிருத்தல்.

மற்றும்

(இ) அரச, அரச கூட்டுத்தாபனங்கள், சபைகள், நியதிச்சட்ட நிறுவனங்கள் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனம் ஒன்றில் குறைந்தபட்சம் 15 வருடங்கள் தொடர்புடைய துறையில் ஆராய்ச்சி அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

உள்வாரி விண்ணப்பதாரர்கள் (பின்வரும் அ அல்லது ஆ):

(அ) மேற்கூறிய வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கான தகுதிகளைப் பூர்த்தி செய்திருத்தல்.

(ஆ) இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரண ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் சிரேஷ்ட கல்விசார் / ஆராய்ச்சி (AR 2) சேவைப் பிரிவில் உள்ள பதவியொன்றில் குறைந்தபட்சம் 05 வருடங்கள் தொடர்புடைய துறையில் திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

சம்பள அளவு: HM 1-1 - 2025 - ரூ. (140,640 - 15 x 4,100 - 202,140) + அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் + E.P.F 15%, E.T.F 3%

வயதெல்லை: 35 வயதுக்குக் குறையாமலும் 55 வயதுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயது எல்லை பொருந்தாது.

02. சிரேஷ்ட ஆராய்ச்சி அதிகாரி (புத்தாக்கம்) - (AR -2) - 01 பதவி

தகைமைகள்:

வெளிவாரி விண்ணப்பதாரர்கள் - பின்வரும் (அ) அல்லது (ஆ)

(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் (UCG) அங்கீகரிக்கப்பட்ட இரத்தினக்கல்லியல் / புவியியல் / பௌதிகவியல் / இரசாயனவியலில் தங்க ஆபரணப் பாடச் சேர்க்கையைக் கொண்ட விஞ்ஞான சிறப்புப் பட்டம் அல்லது பொறியியல் பட்டத்துடன் தொடர்புடைய துறையில் முதுமாணிப் பட்டம் (Masters) பெற்றிருத்தல் ஆரம்பப் பட்டத்தைப் பெற்ற பின்னர் அரச நிறுவனம், சபை, நியதிகள் சட்ட நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனம் ஒன்றில் குறைந்தபட்சம் எட்டு (08) வருடங்கள் தொடர்புடைய துறைசார்ந்த ஆராய்ச்சி அனுபவம்.

(ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் (UCG) அங்கீகரிக்கப்பட்ட இரத்தினக்கல்லியல் / புவியியல் / பௌதிகவியல் / இரசாயனவியல் பாடச் சேர்க்கையைக் கொண்ட விஞ்ஞான சிறப்புப் பட்டம் அல்லது பொறியியல் பட்டத்துடனான தொடர்புடைய துறையில் கலாநிதிப் பட்டமும் (Ph.D.) பெற்றிருத்தல் மற்றும் ஆரம்பப் பட்டத்தைப் பெற்ற பின்னர் அரசு நிறுவனம், சபை, நியதிகள் சட்ட நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனம் ஒன்றில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருடங்கள் தொடர்புடைய துறைசார்ந்த ஆராய்ச்சி அனுபவம்.

உள்வாரி விண்ணப்பதாரர்கள் - பின்வரும் (அ) அல்லது (ஆ)

(அ) மேற்கூறிய வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்குத் தேவையான தகுதிகளைப் பூர்த்தி செய்திருத்தல்.

(ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் (UCG) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து இரத்தினக்கல்லியல் / புவியியல் / பௌதிகவியல் / இரசாயனவியலில் சேர்க்கையைக் கொண்ட விஞ்ஞானப் பட்டம் அல்லது பொறியியல் பட்டத்துடனான தொடர்புடைய துறையில் முதுமாணிப் பட்டம் (Masters) பெற்றிருத்தல் மற்றும் தொடர்புடைய துறையில் முதுமாணித் தகைமையும் (Masters) கல்வி / ஆராய்ச்சிப் பிரிவின் (AR 1) பதவியொன்றில் தொடர்புடைய துறையில் குறைந்தபட்சம் எட்டு (08) வருடங்கள் திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

சம்பள அளவு: AR -2 - 2025 - ரூ. (133,220 - 10 x 3,600 - 169,220) + அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் + E.P.F 15%, E.T.F 3%

வயதெல்லை: 35 வயதுக்குக் குறையாதவராகவும் 55 வயதுக்கு மேற்படாதவராகவும் இருக்க வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயது எல்லை பொருந்தாது.

03. சிரேஷ்ட ஆராய்ச்சி அதிகாரி (வர்ண மேம்பாடு) - (AR -2) - 01 பதவி

தகைமைகள்

வெளிவாரி விண்ணப்பதாரர்கள் - பின்வரும் (அ) அல்லது (ஆ)

(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் (UCG) அங்கீகரிக்கப்பட்ட இரத்தினக்கல்லியல் / புவியியல் / பௌதிகவியல் / இரசாயனவியலில் தங்க ஆபரணப் பாடச் சேர்க்கையைக் கொண்ட விஞ்ஞான சிறப்புப் பட்டம் அல்லது பொறியியல் பட்டத்துடனான தொடர்புடைய துறையில் முதுமாணிப் பட்டம் (Masters) பெற்றிருத்தல் ஆரம்பப் பட்டத்தைப் பெற்ற பின்னர் அரச நிறுவனம், சபை, நியதிகள் சட்ட நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனம் ஒன்றில் குறைந்தபட்சம் எட்டு (08) வருடங்கள் தொடர்புடைய துறைசார்ந்த ஆராய்ச்சி அனுபவம்.

(ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் (UCG) அங்கீகரிக்கப்பட்ட இரத்தினக்கல்லியல் / புவியியல் / பௌதிகவியல் / இரசாயனவியலில் பாடச் சேர்க்கையைக் கொண்ட விஞ்ஞான சிறப்புப் பட்டம் அல்லது பொறியியல் பட்டத்துடனான தொடர்புடைய துறையில் கலாநிதிப் பட்டமும் (Ph.D.) பெற்றிருத்தல் மற்றும் ஆரம்பப் பட்டத்தைப் பெற்ற பின்னர் அரச நிறுவனம், சபை, நியதிகள் சட்ட நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனம் ஒன்றில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருடங்கள் தொடர்புடைய துறைசார்ந்த ஆராய்ச்சி அனுபவம்.

உள்வாரி விண்ணப்பதாரர்கள் (பின்வரும் அ அல்லது ஆ):

(அ) மேற்கூறிய வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்குத் தேவையான தகுதிகளைப் பூர்த்தி செய்திருத்தல்.

(ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் (UCG) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து இரத்தினக்கல்லியல் / புவியியல் / பௌதிகவியல் / இரசாயனவியலில் சேர்க்கையைக் கொண்ட விஞ்ஞானப் பட்டம் அல்லது பொறியியல் பட்டம் (தொடர்புடைய துறையில் சிறப்புப் பட்டம் பெற்றவர்களுக்கு நேர்முகத் தேர்வின் போது முன்னுரிமை வழங்கப்படும்) பெற்றிருத்தல் மற்றும் தொடர்புடைய துறையில் முதுமாணித் தகைமையும் (Masters) கல்விசார் / ஆராய்ச்சிப் பிரிவில் (AR 1) பதவியொன்றில் தொடர்புடைய துறையில் குறைந்தபட்சம் எட்டு (08) வருடங்கள் திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

சம்பள அளவு: AR -2 - 2025 - ரூ. (133,220 - 10 x 3,600 - 169,220) + அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் + E.P.F 15%, E.T.F 3%

வயதெல்லை: 35 வயதுக்குக் குறையாதவராகவும் 55 வயதுக்கு மேற்படாதவராகவும் இருக்க வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயது எல்லை பொருந்தாது.

04. உதவிப் பணிப்பாளர் (இரத்தினக்கல்லியல்) - (MM -1) - 01 பதவி

தகைமைகள்

வெளிவாரி விண்ணப்பதாரர்கள் - பின்வரும் (அ) அல்லது (ஆ)

(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் (UCG) அங்கீகரிக்கப்பட்ட இரத்தினக்கல்லியல் / புவியியல் / பௌதிகவியல் / இரசாயனவியல் அல்லது அது தொடர்பான வேறு பாடத்துறையில் விஞ்ஞானப் பட்டமொன்றைப் பெற்றிருத்தல். (தொடர்புடைய துறையில் சிறப்புப் பட்டம் பெற்றவர்களுக்கு நேர்முகத் தேர்வின் போது முன்னுரிமை வழங்கப்படும்) மற்றும் ஆரம்பப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டதன் பின் பதவியுடன் தொடர்புடைய துறையில் குறைந்தபட்சம் ஒரு (01) வருட கால அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

(ஆ) முன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் (UCG) ஏற்றுக்கொள்ளப்படும் தொழில்நுட்பம் / தொழிற்பயிற்சி நிறுவனத்தினால் வழங்கப்படும் இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரணம் அல்லது தொடர்புடைய துறையில் தேசிய தொழிற் திறனில் (NVQ) 7ஆம் நிலைக்குக் குறையாத தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல் மற்றும் அரசாங்க சேவை, கூட்டுத்தாபனம், நியதிகள் சட்டசபை / நிறுவனத்தில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார்துறை நிறுவனமொன்றில் இரத்தினக்கல்லியல் துறையில் குறைந்தபட்சம் ஒரு (01) வருடகால தகைமைக்குப் பின்னரான அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

உள்வாரி விண்ணப்பதாரர்கள் - பின்வரும் (அ) அல்லது (ஆ)

(அ) மேற்கூறிய வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்குத் தேவையான தகுதிகளைப் பூர்த்தி செய்திருத்தல்.

(ஆ) பதவியுடன் தொடர்புடைய துறையில் கனிஷ்ட முகாமைத்துவ சேவை வகுதியில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருடங்கள் திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

சம்பள அளவு: MM -1-1 - 2025 - ரூ. (91,690 - 10x2,480 - 15x3,450 - 168,240) + அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் + E.P.F 15%, E.T.F 3%

வயதெல்லை: 22 வயதுக்குக் குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருக்க வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயது எல்லை பொருந்தாது.

05. ஆராய்ச்சி அதிகாரி - (AR -1) - 05 பதவிகள்

தகைமைகள்

வெளிவாரி விண்ணப்பதாரர்கள் - பின்வரும் (அ) அல்லது (ஆ) அல்லது (இ)

(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் (UCG) அங்கீகரிக்கப்பட்ட இரத்தினக்கல்லியல் / புவியியல் / கனியவியல் / பௌதிகவியல் / இரசாயனவியல் / ஆபரணவியல் / சுரங்கப் பொறியியல் / பொருள் விஞ்ஞான பொறியியல் பாடங்கள் சகிதம் அல்லது அதனுடன் தொடர்புடைய வேறு பாடத்துறையில் விஞ்ஞான பாடத்தில் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்

(ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட இரத்தினக்கல்லியல் / புவியியல் / கனியவியல் / பௌதிகவியல் / இரசாயனவியல் / ஆபரணவியல் பாடங்கள் சகிதம் அல்லது அதனுடன் தொடர்புடைய வேறு பாடத்துறையில் விஞ்ஞான சாதாரண பட்டமொன்றைப் பெற்றிருத்தல் அத்துடன் குறித்த பாடத்துறையில் பட்டப் பின்படிப்பு டிப்ளோமாவொன்றைப் பெற்றிருத்தல்.

(இ) பதவியுடன் தொடர்புடைய துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில் சார் பட்டய நிறுவனமொன்றின் இணை அங்கத்துவத்தைப் (Associate Membership) பெற்றிருத்தல்.

உள்வாரி விண்ணப்பதாரர்கள் - பின்வரும் (அ) அல்லது (ஆ)

(அ) மேற்கூறிய வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்குத் தேவையான தகுதிகளைப் பூர்த்தி செய்திருத்தல்.

(ஆ) கனிஷ்ட முகாமைத்துவ (JM 1-1) சேவை வகுதி பதவியொன்றில் குறைந்தபட்சம் எட்டு (08) வருடங்கள் குறித்த துறையில் திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

சம்பள அளவு: AR - 2025 - ரூ. (91,650 - 10 x 2,480 - 15 x 3,450 - 168,200) + அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் + E.P.F 15%, E.T.F 3%

வயதெல்லை: 22 வயதுக்குக் குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருக்க வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயது எல்லை பொருந்தாது.

06. ஆராய்ச்சி அதிகாரி (பூகோள தகவல் முறைமை) (AR -1) - 01 பதவி

தகைமைகள்

வெளிவாரி விண்ணப்பதாரர்கள் - பின்வரும் (அ) அல்லது (ஆ) அல்லது (இ)

(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் (UCG) அங்கீகரிக்கப்பட்ட விஞ்ஞானம் / பூகோள தகவல் முறைமை (GIS) அத்துடன் கலை / பூகோளவியல் பாடச் சேர்க்கையுடன் அல்லது குறித்த துறையில் சிறப்புப் பட்டமொன்று.

(ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட விஞ்ஞானம் / பூகோள தகவல் முறைமை (GIS) அத்துடன் கலை / பூகோளவியல் பாடச் சேர்க்கையுடன் அல்லது குறித்த துறைக்குச் சமமான பட்டமொன்றுடன் குறித்த துறையில் பட்டப் பின்படிப்பு டிப்ளோமாவைப் (Post Graduate Diploma) பெற்றிருத்தல்.

(இ) பதவியுடன் தொடர்புடைய துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில் சார் பட்டய நிறுவனமொன்றின் இணை அங்கத்துவத்தைப் (Associate Membership) பெற்றிருத்தல்.

உள்வாரி விண்ணப்பதாரர்கள் - பின்வரும் (அ) அல்லது (ஆ)

(அ) மேற்கூறிய வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்குத் தேவையான தகுதிகளைப் பூர்த்தி செய்திருத்தல்.

(ஆ) கனிஷ்ட முகாமைத்துவ (JM 1-1) சேவை வகுதி பதவியொன்றில் குறைந்தபட்சம் எட்டு (08) வருடங்கள் குறித்த துறையில் திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

சம்பள அளவு: AR-1 - 2025 - ரூ. (91,650 - 10 x 2,480 - 15 x 3,450 - 168,200) + அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் + E.P.F 15%, E.T.F 3%

வயதெல்லை: 22 வயதுக்குக் குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருக்க வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயது எல்லை பொருந்தாது.

07. ஆராய்ச்சி உதவியாளர் (MA 2-2) - 03 பதவிகள்

தகைமைகள்

வெளிவாரி விண்ணப்பதாரர்கள்

(அ) முன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் (TVEC) ஏற்றுக்கொள்ளப்படும் தொழில்நுட்பம் / தொழிற்பயிற்சி நிறுவனத்தினால் அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் பெற்றுக்கொண்ட இரத்தினக்கல்லியல் / புவியியல் / பௌதிகவியல் / இரசாயனவியல் / பொறியியல் அல்லது ஏனைய தொடர்புடைய துறையில் தேசிய தொழிற்றிறன் தகைமையில் (NVQ) 5ஆம் நிலைக்குக் குறையாத தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல்.

உள்வாரி விண்ணப்பதாரர்கள்

(அ) மேற்கூறிய வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்குத் தேவையான தகுதிகளைப் பூர்த்தி செய்திருத்தல்.

சம்பள அளவு: MA 2-2 - 2025 - ரூ. (50,540 - 10 x 540 - 7 x 630 - 4 x 1080 -2 = 0 x1280 -90,270) + அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் + E.P.F 15%, E.T.F 3%

வயதெல்லை: 18 வயதுக்குக் குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருக்க வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயது எல்லை பொருந்தாது.

ஒவ்வொரு விண்ணப்பதாரரும்:

i. இலங்கைப் பிரஜையாக இருக்க வேண்டும்.

ii. பதவிக்குரிய கடமைகளைச் சிறப்பாக நிறைவேற்றுவதற்கும், இலங்கையின் எந்தவொரு பகுதியிலும் சேவை செய்வதற்கும் தேவையான உடல் மற்றும் உள தகுதிகளைக் கொண்டவராக இருக்க வேண்டும்.

iii.நன்டத்தை கொண்டவராக இருக்க வேண்டும்.

விண்ணப்பிக்கும் முறை:

(1)இதன் பொருட்டு தகுதிபெற்ற விண்ணப்பதாரர்கள் கல்விச் சான்றிதழ்கள், தொழில்சார் தகுதிகள் மற்றும் ஏனைய சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளுடன், உங்களது உறவினரல்லாத இரு (02) பரிந்துரையாளர்களின் விவரங்களைக் கொண்ட முழுமையான சுய விபரக் குறிப்பை பின்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டும்.

(2)மேலே (1)இல் குறிப்பிட்டுள்ள தேவையான ஆவணங்கள் இணைக்கப்படாத விண்ணப்பங்கள், முழுமையற்ற விண்ணப்பங்கள் மற்றும் தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(3)விண்ணப்பிக்கும் பதவியை கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிட்டு, 2026.10.28ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பின்வரும் முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும்.

(4)தற்போது அரச, அரை அரச மற்றும் நியதிகள் சட்ட நிறுவனங்களில் சேவையில் உள்ளவர்கள் தமது விண்ணப்பங்களைச் சம்பந்தப்பட்ட நிறுவனத் தலைவர்கள் ஊடாக அனுப்பிவைத்தல் வேண்டும்.

(5)தகுதியுடைய மற்றும் குறும்பட்டியல் செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் மட்டுமே நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்படுவார்கள்.

தலைவர்,
இரத்தினக்கல் மற்றும் ஆபரண ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்,
இல. 73/5/A, "ருவன் செவன", வெலிவிட்ட, கடுவளை.
தொலைபேசி: 0112-579187 / 0114-324679